©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 257] CHENNAI, WEDNESDAY, AUGUST 25, 2010
Aavani 9, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி.**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், கொடும்பப்பட்டி ஊராட்சியின் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் அ4/2064/2009.)*

**No. VI(2)/412(a)/2010.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றிய, கொடும்பப்பட்டி ஊராட்சியின் ஊராட்சி மன்றத் தலைவர் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் அத்தியாயம் 5 சட்டப்பிரிவு 84 உட்பிரிவு (சி) மற்றும் அத்தியாயம் 3 சட்டப்பிரிவு 46–ன்படி ஊராட்சி மன்றத் தலைவருக்குள்ள கடமையினை செய்யத் தவறியது, அரசாணை நிலை எண் 167 ஊரக வளர்ச்சி (சி4)த் துறை, நாள்: 09–08–1999–ன்படி ஊராட்சி மன்றக் கூட்டங்கள் முறையாக நடத்தாதது, அரசாணை நிலை எண் 223, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 26–03–1998–ஐ மீறி தெருவிளக்கு பராமரிப்பு செலவினங்களுக்கான பொருட்கள் வாங்கியது, அரசாணை நிலை எண் 55, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.ந)த் துறை, நாள் 01–04–2008–ஐ மீறி தெருவிளக்கு பராமரிப்பு செலவினங்கள் மேற்கொண்டது, அரசாணை நிலை எண் 83 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி மா.தி. 2 துறை, நாள் 29–06–2006–ஐ மீறி கைப்பம்பு பராமரிப்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு செலவினங்கள் மேற்கொண்டது, அரசாணை நிலை எண் 92, ஊரக வளர்ச்சி(சி3)த் துறை, நாள் 31–12–1998–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை மீறி துணைச் செலவுச்சீட்டுகள் இன்றி செலவினம் மேற்கொண்டது, அரசாணை நிலை எண் 43, ஊரக வளர்ச்சி (சி3)த் துறை, நாள் 21–02–2000–ல் குறிப்பிட்ட இனங்களைத் தவிர பிற செலவினங்களுக்கு மூன்றாம் நபரின் பெயரில் காசோலையாக வழங்க வேண்டும் என்கின்ற நடைமுறையினை மீறி இவ்வூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பெருவாரியான செலவினங்களுக்குத் தொகை தனதாகப் பெறப்பட்டது, மதுரை தடயவியல் அலுவலக உதவி இயக்குநர் அறிக்கையின்படி, அனுப்பப்பட்ட மாதிரி கையொப்பத்திற்கும் ஆவணங்களில் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடுகள் உள்ளதாக அறிக்கை வரப்பெற்று, அதன்மூலம், ஊராட்சியின் பொதுமக்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய ஊராட்சி மன்றத் தலைவரே, ஊராட்சியின் ஆவணங்களில் பிற உறுப்பினர்களின்

கையெழுத்தினை இட்டு, இந்திய அரசியல் அமைப்பின் இறையாண்மையினையே களங்கப்படுத்தியது போன்ற காரணங்களுக்காக 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி மருங்காபுரி ஊராட்சி ஒன்றிய, கொடும்பப்பட்டி ஊராட்சியின் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி மா. தனலெட்சுமி மாணிக்கம் என்பவரை பதவி நீக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி அறிவிப்பு வெளியிடப்படும் நாள் முதல் மருங்காபுரி ஊராட்சி ஒன்றிய, கொடும்பப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவரின் பதவி நீக்கம் உறுதி செய்யப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி,
2010 ஆகஸ்ட் 24.

**தா. சவுண்டையா,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.